மேற்கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் இக்கட்டடத்தின் பழைமை மாறாமல் புதுப்பிக்க ரூ. 28 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் கருத்துரு பெறப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது.

முற்பகல் 10–15

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனையிலுள்ள இந்தத் திட்டத்தை, நடப்பு நிதியாண்டிலேயே நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு, நன்றி சொல்லி அமர்கின்றேன்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலைமைக்கேற்ப இந்த ஆண்டிலேயே அதை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. சிவசாமி.

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக் கல்லூரிகளுக்குப் புதிய கட்டடம் கட்டுவதற்குப் பெற்றோர்–ஆசிரியர் கழகம் மற்றும் பொது மக்கள் சார்பாக 25 சதவிகிதம்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது.

வினா எண் 225, திரு. கோ. இரவிராஜ், மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

225—

ஆசிரியர் நியமனம்

***71482—திரு. கோ. இரவிராஜ்:**

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி, அரசு கலைக் கல்லூரியில், போதிய ஆசிரியர்கள் இல்லாமல், மாணவர்கள் படிப்பு பெரிதும் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், ஆசிரியர் பணியிடங்கள் எப்போது நிரப்பப்படும்?

2005 மார்ச் 29]

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) திருத்தணி, அரசுக் கலைக் கல்லூரியில் காலியாக உள்ள விரிவுரையாளர் பணியிடங்களில், 2004–2005 ஆம் நிதியாண்டில் 18 கௌரவ விரிவுரையாளர்கள் பணியமர்த்தப்பட்டு, பணிபுரிந்து வருகின்றனர். எனவே, மாணவர்களின் படிப்பு பாதிக்கப்படவில்லை. (ஆ) கேள்வி எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோ. இரவிராஜ், இருக்கையில் இல்லை.

வினா எண் 226, திரு. க. முருகவேல் ராஜன், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

226—

பால் குளிரூட்டும் நிலையம்

***1498—திரு. க. முருகவேல் ராஜன்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதியில் உற்பத்தி செய்த பாலைச் சேமித்து வைப்பதற்கு, பால் குளிரூட்டும் நிலையம் வந்தவாசி பகுதியில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) பால் உற்பத்தியாளர்களுக்கு நிலுவைத் தொகையினைப் பட்டுவாடா செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) வந்தவாசி பகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை. (ஆ) பால் உற்பத்தியாளர்களுக்குப் பால் பணம் பட்டுவாடா நிலுவையின்றி 20–3–2005 வரை வழங்கப்பட்டுவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS